சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 18.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 38/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | சுகுமாறன் |
| தந்தை பெயர் | : | வீரன்செட்டி |
| கிராமம் | : | மதுரை |
| தாலுக்கா | : | மதுரை வடக்கு |
| தொழில் | : | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஓய்வு |
| வயது | : | 62 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் காவல் துறையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக நாகப்பட்டினத்தில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக 2017 ஆண்டு பணிபுரிந்தபோது திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய குற்ற எண். 38/2017 என்ற வழக்கில் அப்போதைய காவல் ஆய்வாளராக பொறுப்பில் இருந்த பிரேம்ஆனந்த் என்பவர் மேற்படி வழக்கினை முதற்கட்டமாக விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அ.சா-1 சத்தியமூர்த்தி, அ.சா-2 சந்திரபோஸ், அ.சா-3 நரேஷ்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். அவரது விசாரணையில் இந்த வழக்கில் இதச பிரிவு 435 மற்றும் தமிழ்நாடு சொத்துக்கள் சேதப்படுத்துதல் சட்டம் பிரிவு 4 உ/இ பட்டியல் சமூகத்தினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழ் பிரிவு 3(2)(va) கீழான குற்றங்கள் தென்படுகின்ற காரணத்தினால் மேற்படி பிரிவின் கீழ் சட்டபிரிவு மாறுதல் அறிக்கை ஒன்றை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதனை தொடர்ந்து திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இந்த வழக்கினை திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக இருந்த என்னை புலன் விசாரணை செய்ய வேண்டும் என அலுவலக செயல் முறை C.No.14/SJ&HR/TVR/2017, Dated: 13.02.2017 உத்தரவு பிறப்பித்துள்ளார். அந்த உத்தரவு நகல் **அ.சா.ஆ-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனை தொடர்ந்து நான் இந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 14.02.2017 அன்று சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டேன். ஏற்கனவே சிறப்பு சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ-2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ-6 மாதிரி வரைபடம் தயார் செய்து வைத்திருந்தார். அது சரியாக இருந்த காரணத்தினால் நான் தனியாக மாதிரி வரைபடம் மற்றும்

பார்வை மகஜர் தயார் செய்யவில்லை. அதே தினம் அ.சா-1 சத்தியமூர்த்தி, அ.சா-2 சந்திரபோஸ், அ.சா-3 நரேஷ்குமார், அ.சா-4 ராஜ்குமார், அ.சா-5 வீரையன், அ.சா-7 மகேந்திரன், அ.சா-8 வினோத் ஆகியோர்களை விசாரணை செய்து தனி தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே தினம் காலை 9.00 மணிக்கு திருவாரூர் விளமல் பேருந்து நிறுத்தத்தில் வைத்து எதிரி வெற்றிவேல் என்பவரையும் மற்றும் நான்கு சிறார்களையும் கைது செய்தேன். பின்னர் சட்ட நடைமுறைகளை பின்பற்றி எதிரியையும், சிறார்களையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதே தினம் இவ்வழக்கின் வாதி அ.சா-1 சத்தியமூர்த்தி என்பவருக்கு சாதி சான்றிதழ் வேண்டு திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். அதே தினம் ஆஜர் எதிரிக்கு சாதி சான்றிதழ் வேண்டி தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 16.02.2017 ம் தேதி அன்று இவ்வழக்கில் சேதம் அடைந்த வாகனமான டாடா சுமோ TN 50 Y 7677 வானத்திற்கு சேத மதிப்பினை தெரிந்து கொள்ள திருவாரூரில் உள்ள இந்தியன் ஆட்டோ ஏஜன்சிஸ் நிறுவனத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 24.06.2017 ம் தேதி அன்று இவ்வழக்கில் சம்மந்தபட்ட வாகனத்திற்கு அ.சா.ஆ-3 சேத மதிப்பீடு சான்றிதழ் கிடைக்கபெற்றது. மேற்படி சான்றிதழ் வழங்கிய அ.சா-9 திருமுருகன் செந்தில்குமரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திருவாரூர் மண்டல துணை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து கடந்த 24.10.2017 அன்று அ.சா-1 சத்தியமூர்த்தி என்பவர் இந்து பள்ளன் வகுப்பை சேர்ந்தவர் என அ.சா.ஆ-4 ஆன சாதி சான்றிதழை பெற்றேன். கடந்த 24.07.2017 அன்று மண்டல துணை வட்டாட்சியர் ஒரத்தநாடு அவர்களிடமிருந்து எதிரி இந்து கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் என சாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் அ.சா.ஆ-9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாதி சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியர் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் அவர்களை

விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே தினம் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜகோபாலன் மற்றும் ஆய்வாளர் பிரேம்ஆனந்த் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் புலன் விசாரணை முடித்து ஆஜர் எதிரி மீது கடந்த 17.11.2017 ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.12.18 18:18:09 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.